**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

## DEPOSITION OF WITNESS

**CC.No. 63/2025**

PW-5

| | | | |
|---|---|---|---|
| Name | பச்சையப்பன்(PW5) | | |
| Father's Name | கோபாலகிருஷ்ணன் | தொழில் | |
| Village | வள்ளிபுரம் | | |
| Taluk | அவிநாசி | Age | **41** |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th **day of May 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை:-**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு மெக்கானிக்காக தொழில் செய்து வருகிறேன். கடந்த 13.11.2024 ம் தேதி காலை 06.30 மணி அளவில் பெருமாநல்லூர்-குன்னத்தூர் சாலையில் குன்னத்தூர் நோக்கி செல்லும் திசையில் நடை பயிற்சி சென்று கொண்டிருந்தேன். லோகநாதன் எனக்கு முன்னால் வாக்கிங் சென்று கொண்டிருந்தார். அப்போது எங்களுக்கு பின்னால் இருந்து யமஹா கிரக்ஸ் இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் அதிவேகமாகவும் கவன குறைவாகவும் வந்து லோகநாதன் மீது மோதிவிட்டார். லோகநாதன் கீழே விழுந்ததில் தலையில் பலத்த அடிபட்டு இருந்தது. நானும் அருகில் இருந்தவர்களும் அவரை தூக்கி உட்கார வைத்து அவரது மகன் மகேஸ்வரனுக்கு போன் செய்து தகவல் சொன்னோம். அவரது மகன் வந்து லோகநாதனை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். லோகநாதன் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். விபத்தை ஏற்படுத்திய யமஹா இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபரை நான் பார்த்தேன். அவரை தற்போது பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். அவர் ஆஜர் எதிரி தான் .போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் பசுமை நகரில் வசித்து வருகிறேன். இறந்து போன லோகநாதன் மற்றும் மகேஸ்வரன் அருகில் வசிப்பவர்கள் என்றால் எனக்கு தெரியும். லோகநாதன் இறந்து போன விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் விபத்து நடந்த அன்றோ அல்லது மறுநாளோ காலமாகிவிட்டார் என்பதை தெரிந்து கொண்டேன். நான் மருத்துவமனை செல்லவில்லை. நான் மகேஸ்வரனுக்கு போன் செய்து தகவல் சொல்லிவிட்டு நான் என்னுடைய வேலை காரணமாக சென்றுவிட்டேன். போலீசார் எத்தனை நாட்கள் லோகநாதன் இறந்த பின்பு என்னை விசாரித்தனர் என்றால் எத்தனை நாட்கள் கழித்து என்னை அழைத்து விசாரித்தனர் என்று எனக்கு ஞாபகம் இல்லை. விபத்து நடந்த தினத்தன்று என்னை போலீசார் விசாரிக்கவில்லை. விபத்து நடந்ததாக சொல்லப்படும் தேதியன்று மழை பெய்து

கொண்டிருந்தது என்றால்  மிதமான மழை இருந்தது. நான் முதல் விசாரணையில் சொன்ன சாட்சியத்தை தான் போலீஸ் விசாரணையிலும் சொன்னேன். காலம் சென்ற லோகநாதன் எனக்கு எவ்வளவு அடி தூரத்தில் நடந்து சென்று கொண்டிருந்தார் என்றால்  10 மீட்டர் இருக்கும். பெருமாநல்லூர் டு குன்னத்தூர் ரோட்டில் நான் வலது புறமாக சென்றேனா அல்லது இடது புறமாக சென்றேனா என்றால் குன்னத்தூர் ரோட்டை நோக்கி இடது புறமாக நடந்து சென்றேன். விபத்து மண் ரோட்டில் நடந்தது என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியாது என்றால் TN 30 AK 5925. மழை பெய்த தினத்தன்று பணிமூட்டமாக இருந்தது என்றால் சரிதான்.  நான் பசுமை நகர் பஸ் ஸ்டாப் அருகே கடை வைத்துள்ளேன். நான் மகேஸ்வரனின் நண்பர் என்றும்  அவர் அவருடைய தகப்பனாரின் இறப்பிற்கு சாட்சியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கு இணங்க  சம்பவத்தை நேரில் பார்க்காமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.
நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் இறந்து போன லோகநாதன் மழை பெய்து கொண்டிருந்ததால் பனி மூட்டமாக இருந்ததால் வாகனம் வருவதை கவனிக்காமல் லோகநாதன் ரோட்டை கடந்த போது விபத்து லோகநாதனின் கவன குறைவா தான் ஏற்பட்டது என்றால் இல்லை. நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் செல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை  என்றால் சரியல்ல.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை  நடுவர், அவிநாசி. |